an International CBSE Finger Print School
Coimbatore

# இயல் 5.3- தமிழர் பெருவிழா

GRADE- VI

## கட்டுரை

## பொங்கல் திருநாள்

**முன்னுரை:**

இயற்கையோடு இணைந்து வாழ்வதே தமிழரின் வாழ்க்கை முறை ஆகும். இயற்கையை வணங்குதல் தமிழர் மரபாகும். தமிழர் கொண்டாடும் பல விழாக்கள் இயற்கையைப் போற்றும் வகையில் அமைந்திருக்கின்றன. அவற்றுள் சிறப்பானது பொங்கல் விழா ஆகும். இது தமிழர் திருநாள் என்றும் போற்றப்படுகின்றது.

**போகித்திருநாள்:**

வீட்டில் உள்ள பயனற்ற பொருட்களை நீக்கி வீட்டைத் தூய்மைச் செய்யும் நாள் போகித்திருநாள். இது மார்கழி மாதத்தின் இறுதி நாள். தீயனவற்றை அழித்து நல்லனவற்றைச் சிந்திக்க வேண்டும் என்பதற்காகப் போகித்திருநாள் கொண்டாடப்படுகின்றது.

**பொங்கல் திருநாள்:**

தை மாதத்தின் முதல் நாள் பொங்கல் திருநாள் ஆகும். திருநாள் அன்று வாசலில் வண்ணக் கோலமிடுவர். மாவிலை தோரணம் கட்டுவர். புதுப்பானையில் புத்தரிசியோடு வெல்லம், முந்தரி, நெய் சேர்த்து பொங்கல் செய்வர். பொங்கல் என்பதற்குப் ‘பொங்கி பெருகுவது’ என்பது பொருள்.

**மாட்டுப்பொங்கல்:**

பொங்கலுக்கு அடுத்த நாள் மாட்டுப்பொங்கல். மாடு உழவர்களின் செல்வமாக மதிக்கப்படுகின்றன. உழவுக்கும் உழவருக்கும் உற்ற துணையாக மாடுகள் விளங்குகின்றன.அவற்றிற்கு நன்றி செலுத்தும் வகையில் மாட்டுப்பொங்கல் கொண்டாடப்படுகின்றது.

**காணும் பொங்கல்:**

மாட்டுப்பொங்கலுக்கு அடுத்த நாள் காணும் பொங்கல். உற்றார், உறவினர் மற்றும் நண்பர்களின் வீடுகளுக்குச் சென்று அவர்களைக் கண்டு மகிழ்வர். குடும்பத்தினருடன் விரும்பிய இடங்களுக்குச் சென்று மகிழ்வுடன் பொழுதைக் கழிப்பர்.

**முடிவுரை:**

இயற்கை , உழைப்பு, நன்றியுணர்வு, பண்பாடு ஆகியவற்றைப் போற்றும் விழாவாகவே பொங்கல் விழா கொண்டாடப்படுகின்றது. ஆகவே நம் தமிழரின் பண்பாட்டைப் போற்றி காப்போம்